ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2057/5 - 2018 පෙබරවාරි මස 05 වැනි සඳුදා - 2018.02.05

*2057/5 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

இரண்டாயிரத்துப்பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவு மற்றும் 30 ஆம் பிரிவின் கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சஜித் பிரேமதாச,<br>வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை<br>அமைச்சர்.

கொழும்பு,<br>*2018, சனவரி 03.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (தகைமைபெற்ற ஆட்களைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப்பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தகைமைபெற்ற ஆள் ஒருவராக பதிவு செய்வதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள் விடயத்திற்கேற்ப தகைமைபெற்ற ஆளொருவராக அத்தகைய ஆளைப் பதிவு செய்வதற்கு (இதனகத்துப் பின்னர் “அதிகாரசபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அல்லது இயைபான உயர்தொழில் குழுவினூடாக அதிகார சபைக்கு நேரடியாக விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

3. சொல்லப்பட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை அல்லது அச்சொல்லப்பட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆள் ஒருவர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளை பதிவு செய்வதற்கான கட்டளைகள் இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

4. தகைமைபெற்ற ஆளொருவராக அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஏற்புடையற்பாலதான பதிவுக் கட்டணக்கொடுப்பனவின் மேல், பதிவிலக்கம் ஒன்று குறித்தளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி ஒன்றுக்கு செல்லுபடியானதாக இருக்கவேண்டியதான அத்தகைய சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுதலும் வேண்டும்.

5. அந்தந்த உயர்தொழில் குழுவினது எவரேனும் தகைமைபெற்ற ஆள் அல்லது வடிவமைப்பு தராதரத்தையும் ஆவணப்படுத்தலையும் பேணாத பதிவுச்சபை இதற்கான அட்டவணையின் பாகம் III இல் குறித்துரைக்கப்பட்டவாறு அதிகார சபையினால் தரப்பட்ட நியமங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

6. அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட்ட தகமைவாய்ந்த ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய பதிவு முடிவுறும் திகதிக்கு முன்னர், அத்தகைய சான்றிதழைப் புதுப்பிப்பதற்காக இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு புதிப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்து விடயத்திற்கேற்ப அதிகார சபைக்கு அல்லது இயைபான உயர்தொழில் குழுவினூடாக அதிகார சபைக்கு நேரடியாக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

**அட்டவணை**

பாகம் I

இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் உயர்தொழில்சார் குழுக்கள், இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவகம், இலங்கை கணிய அளவையாளர்கள் நிறுவகம் மற்றும் கட்டிடக்கலைஞர்கள் பதிவுச்சபை என்பனவற்றின் உறுப்பினர்களாக அல்லாத ஆட்களின் பதிவுக்கான கட்டளைகள்.

இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் உயர்தொழில்சார் குழுக்கள், இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவகம், இலங்கை கணிய அளவையாளர்கள் நிறுவகம் மற்றும் தகமைவாய்ந்த ஆட்களான கட்டிடக்கலைஞர்கள் பதிவுச்சபை என்பவற்றின் உறுப்பினர்களாக அல்லாத ஆட்களின் பதிவுக்கான கட்டளைக்கற்கள் ஆனவை இயைபான உயர்தொழில்சார் அல்லது கல்விசார் குழுவினால் அல்லது பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் பதிவுச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

பாகம் II

**தகைமைபெற்ற ஆட்களுக்கான பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம்**

இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் உயர்தொழில்சார் குழுக்கள், இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவகத்தின் மற்றும், இலங்கை கணிய அளவையாளர் நிறுவகத்தின் மற்றும் கட்டிடக்கலைஞர்கள் பதிவுச்சபையின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களுக்கான பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தற் கட்டணம் கீழே குறிப்பிடப்பட்டவாறு இருத்தல் வேண்டும். அத்தகைய கட்டணங்கள் காலத்திற்குகாலம் அதிகார சபையினால் மீளாய்வு செய்யப்படலாம்.

**பொறியியல்**

| வகுதி | பதிவுக் கட்டணம்<br>ரூபா | வருடாந்த புதிப்பித்தல் கட்டணம்<br>ரூபா |
|---|---|---|
| பொறியியலாளர் | 100,000.00 | 50,000.00 |
| இணை/இணைந்த பொறியியலாளர் | 90,000.00 | 40,000.00 |

**கட்டிடக்கலை**

| வகுதி | பதிவுக் கட்டணம்<br>ரூபா | வருடாந்த புதிப்பித்தல் கட்டணம்<br>ரூபா |
|---|---|---|
| கட்டிடக்கலைஞர் | 100,000.00 | 50,000.00 |

***கணிய அளவையாளர்கள்***

| *வகுதி* | *பதிவுக் கட்டணம்*<br><br>*ரூபா* | *வருடாந்த புதிப்பித்தல் கட்டணம்*<br>*ரூபா* |
|---|---|---|
| *கணிய அளவையாளர்கள்* | *100,000.00* | *50,000.00* |
| *உதவிக் கணிய அளவையாளர்கள்* | *90,000.00* | *40,000.00* |

*மேலேயுள்ள கட்டணங்கள் ஏற்புடையற்பாலதான வரிகளுக்குப் புறநீங்கலானதாகும்.*

***அட்டவணை***

*பாகம்* III

***அதிகார சபையினால் வெளியிடப்பட்ட நியமங்கள் பற்றிய ஆவணங்களின் பட்டியல்***

| *வெளியீட்டு இல.* | *வெளியீட்டின் பெயர்* |
|---|---|
| ICTAD/ SBD/ 01 | *நியமவிலைகூறல் ஆவணம் - வேலைகளின் பெறுகை* [*2 ஆம் பதிப்பு - (மீளாய்வு செய்யப்பட்டது) 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம்*] |
| ICTAD/ SBD/ 01 (Vol - 1) | *நியமவிலைகூறல் ஆவணம் (தொகுதி - 1)* |
| ICTAD/ SBD/ 01 (Vol - 2) | *நியமவிலைகூறல் ஆவணம் (தொகுதி - 2) - இறுவட்டு* |
| ICTAD/ SBD/ 02 | *நியமவிலைகூறல் ஆவணம் பாரிய ஒப்பந்தங்கள்* [*2 ஆம் பதிப்பு - (மீளாய்வு செய்யப்பட்டது) 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம்*] |
| ICTAD/ SBD/ 01 (Vol - 1) | *நியமவிலைகூறல் ஆவணம் - பாரிய ஒப்பந்தங்கள் (தொகுதி - 1)* |
| ICTAD/ SBD/ 02 (Vol - 2) | *நியமவிலைகூறல் ஆவணம் பாரிய ஒப்பந்தங்கள் (தொகுதி -* 1I*) இறுவட்டு* |
| ICTAD/ SBD/ 03 | *நியமவிலைகூறல் ஆவணம் சிறிய ஒப்பந்தங்கள்* [*2 ஆம் பதிப்பு - மீளாய்வு செய்யப்பட்டது) 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம்*] |
| ICTAD/ SBD/ 03 (Vol - 1) | *நியமவிலைகூறல் ஆவணம் - சிறிய ஒப்பந்தங்கள் (தொகுதி- 1)* |
| ICTAD/ SBD/ 03 (Vol - 2) | *நியமவிலைகூறல் ஆவணம் - சிறிய ஒப்பந்தங்கள் (தொகுதி - 2) இறுவட்டு* |
| ICTAD/ SBD/ 04 | *நியமவிலைகூறல் ஆவணம் - வடிவமைப்பு மற்றும் கட்டி அமைத்தல் ஒப்பந்தங்கள்* [*1 ஆம் பதிப்பு - மீளாய்வு செய்யப்பட்டது) 2003 ஆம் ஆண்டு மே மாதம்*] |
| ICTAD/ SBD/ 04 (Vol - 2) | *நியமவிலைகூறல் ஆவணம் - வடிவமைப்பு மற்றும் கட்டி அமைத்தல் ஒப்பந்தங்கள் (தொகுதி - 2) இறுவட்டு* |
| ICTAD/ SBD/ 05 | *நியமவிலைகூறல் ஆவணம் - சிறிய ஒப்பந்தங்கள் (தகவலுக்காக மட்டும்)* |
| ICTAD/ SBD/ 06 | *நியமவிலைகூறல் ஆவணம் - வேலைகள் தேடி வழங்கல் சிறிய ஒப்பந்தங்கள் (தேவை நோக்கீட்டிற்கு மட்டும்)* |

**அட்டவணை** (தொடர்ச்சி)

பாகம் III

**அதிகார சபையினால் வெளியிடப்பட்ட நியமங்கள் பற்றிய ஆவணங்களின் பட்டியல்**

| வெளியீட்டு இல. | வெளியீட்டின் பெயர் |
|---|---|
| CIDA/CE/ 107 | இலங்கை சிவில் பொறியியல் நியம அளவீட்டு முறை (CESMM- SL) |
| CIDA/SP/ 102 | நீர்ப்பாசன மற்றும் காணி வடிகாலமைப்புக்கான அளவுக்குறிப்பீடுகள் [1 ஆம் பதிப்பு - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம்] |
| SCA/ 3/ 2 | நீர்ப்பாசன கழிவு நீர்வடிகால் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு- [2 ஆம் பதிவு (மீளாய்வுசெய்யப்பட்டது) - 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம்] |
| SCA/ 3 | நீர்ப்பாசன கழிவு நீர்வடிகால் மற்றும் மழை நீர் வடிகாலமைப்பு- [2 ஆம் பதிவு (மீளாய்வுசெய்யப்பட்டது) - 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம்] |
| SCA/ 3/3 | காணிமீட்பு வேலைகள்- [2 ஆம் பதிப்பு (மீளாய்வு செய்யப்பட்டது, 1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ] |
| SCA / 3/ 4 | நிலக்கீழ் நீரைத்தேடிக் கண்டறிதல் மற்றும் தேடிப்பயன்படுத்தலுக்கான அளவுக் குறிப்பீடுகள் - [2 ஆம் பதிவு (மீளாய்வு செய்யப்பட்டது) - 1999 ஆம் ஆண்டு மே மாதம்] |
| SCA / 4/1 | கட்டிட வேலைகளுக்கான அளவுக் குறிப்பீடுகள் (தொகுதி I) - [3 ஆம் பதிப்பு (மீளாய்வு செய்யப்பட்டது) - 2004 ஆம் ஆண்டு யூலை மாதம்] |
| SCA / 4/II | கட்டிட வேலைகளுக்கான அளவுக் குறிப்பீடுகள் (தொகுதி II) - [2 ஆம் பதிப்பு (மீளாய்வு செய்யப்பட்டது) - 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்] |
| SCA/ 5 | நிர்மாண வீதிகள் மற்றும் பாலங்களைப் பேணுதல் என்பவற்றுக்கான நியம அளவுக் குறிப்பீடுகள் [2 ஆம் பதிப்பு - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம்] |
| SCA/6 | கரையோர மற்றும் துறைமுகப் பொறியியல் வேலைகளுக்கான அளவுக் குறிப்பீடுகள் [2 ஆம் பதிப்பு (மீளாய்வு செய்யப்பட்டது) 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் ] |
| SCA/7 | தரைத்தோற்ற வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள் - தொகுதி I |
| SCA/8 | மின்சார மற்றும் பொறிமுறை வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடு [2 ஆம் பதிப்பு (மீளாய்வு செய்யப்பட்டது) 2000 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் ] |
| SCA/9 | தீயைக் கண்டுபிடித்தல், பாதுகாத்தல் மற்றும் அடக்குதல் முறைமைகளுக்கான அளவுக் குறிப்பீடுகள் |
| CIDA/SP/ 101 | முன்னிருந்த இடத்தில் வலுவூட்டப்பட்ட கொன்கிறீற் அடுக்குகளிலுள்ள மென்மரத்தகடு மற்றும் வாரிருப்புக்கான அளவுக் குறிப்பீடுகள் |
| ICTAD /DEV/ 17 | கட்டிட வேலைகள் மற்றும் கணியங்களின் மாதிரிப் பட்டியலுக்கான இடநுண்ணயவுக்கான அளவுக் குறிப்பீடுகள் [1 ஆம் பதிப்பு - 1992 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் ] |

02- 649/1